# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் – செயலாளர் தெரிவுகளை இரத்துசெய்ய உடன்பாடு ஏற்பட்டுள்ளது!

## ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி தவராசா தகவல்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தலைவர் மற்றும் செயலாளர் தெரிவுகளை இரத்துசெய்ய உடன்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி தவராசா தகவல் வழங்கியுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சிக்கு எதிராக நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவானது இன்றையதினம் திருகோணமலை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சட்டசத்தரணி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்தமாதம் 21ஆம் மற்றும் 27ஆம் திகதிகளில் இடம்பெற்ற பொதுச்சபை கூட்ட தெரிவுகளை இரத்துசெய்யக்கோரி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதன்படி மனுதாரர்களின் கோரிக்கைக்கு அமைவாகவும், கட்சியின் நலன்கருதியும் குறித்த கோரிக்கைகளுக்கு நாங்கள் உடன்பட்டோம்.

இதற்கு காரணம் இது ஒரு கட்சி சார்ந்த 2➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 17 வியாழக்கிழமை 21.02.2024 கதிர் 192




# பலமான அரசியல் கூட்டணியை ஸ்தாபிப்போம்! நாமல் ராஜபக்ச எம்.பி. உறுதிபடத் தெரிவிப்பு



பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று ஒரு தரப்பினர் குறிப்பிடுவது அவர்களின் தனிப்பட்ட நிலைப்பாடே தவிர அது கட்சியின் நிலைப்பாடல்ல, என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன தலைமையிலான பரந்துப்பட்ட அரசியல் கூட்டணியின் ஊடாகவே ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார். ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானதும் எமது வேட்பாளரை அறிவிப்போம்.

அத்துடன், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையில் ஸ்தாபிக்கப்படும் பரந்துபட்ட அரசியல் கூட்டணி ஊடாகவே ஜனாதிபதி வேட்பாளர் 2➤

# புதிய காவல்துறை மா அதிபர் ஜனாதிபதியைச் சந்தித்தார்



புதிய காவல்துறை மா அதிபராக நியமனம் 2➤

# சிவாஜிலிங்கம் விடுதலை!

திலீபனின் நினைவேந்தலை அனுஸ்டித்தமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கலிருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் விடுவிக்கப் பட்டுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று வழங்கிய உத்தரவின் கீழ் இவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வழக்கானது பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தொடர்பான சமர்ப் பணங்களை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி கடந்த 24ஆம் திகதி முன்வைத்திருந்தார்.

இந்தநிலையில், சமர்ப்பணங்களை ஆராய்ந்த கொழும்பு மேல் நீதிமன்றம் குறித்த வழக்கில் இருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங் கத்தை விடுவித்துத் தீர்ப்பளித்துள்ளது. (04)

# பொருளாதாரம் சிறைப்படுத்தப்பட்டுள்ளது!

## அனுரகுமார திசநாயக்க சுட்டிக்காட்டு



எமது நாட்டின் வரி விதிப்பின் மூலம் எமது பொருளாதாரம் சிறைப்படுத்தப்பட்டுள்ளதால், எமது பொருளாதாரம் விரிவடையவில்லை, என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் வங்கி மற்றும் நிதிசார் ஒன்றியத்தின் கொழும்பு மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தளர்வான ஒரு வரிக்கொள்கையே எமக்குத் தேவை. எமது மத்திய வங்கி ஆளுனர் 2➤

# இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிரான வழக்கு சித்திரை மாதம் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

## சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா தெரிவிப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிரான வழக்கு எதிர்வரும்சித்திரை மாதம்25ஆம்திகதிக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு எதிராக நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவு தொடர்பான வழக்கு இன்றையதினம் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த வழக்கு சுருக்கமாக முடிக்கப்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்பது இரண்டு தரப்பினரதும் பொதுவான நிலைப்பாடாக இன்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்திலே தெரிவிக்கப்பட்டது. இருந்தாலும் சட்ட விதிகளுக்கு அமைவாக இன்றைய தினம் நாங்கள் மறுமொழி தாக்கல் செய்வதற்கு திகதி குறிப்பிடுமாறு நான் கேட்டிருந்தேன்.

அந்த அடிப்படையில் எதிர்வரும் சித்திரை மாதம் 25ஆம் திகதிக்கு மறுமொழி தாக்கல் செய்யுமாறு வழக்கு தவணை இடப்பட்டு இருக்கிறது, அத்தோடு ஐந்தாவது எதிராளியான சண்முகம் குகதாசனுக்கு மீண்டும் அழைப்பு கட்டளை அனுப்பப்படுவதற்கும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

முதலாவது மற்றும் மூன்றாவது எதிராளிகளாக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகிய இருவர் 2➤

# அதீத வெப்பக் காலநிலை மேமாதம் வரை நீடிக்கும்!

நாட்டின் பல பகுதிகளில் நிலவும் வெப்பமான காலநிலை எதிர்வரும் மே மாதம் வரையில் எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன் கடந்த 24 மணித்தியாலங்களில் கொழும்பு மாவட்டத்தில் 36.8 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், குருநாகல், காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் சில இடங்களில் மனித உடலால் உணரப்படும் வெப்பத்தை விட அதிகமான வெப்பம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் அதிக வெப்பநிலை நிலவும் சந்தர்ப்பங்களில் விளையாட்டுப் பயிற்சிகள், விளையாட்டு நிகழ்வுகள் அல்லது ஏனைய வெளிப்புற நடவடிக்கைகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதைத் தவிர்க்குமாறு 2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# யாழில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கப் போராட்டத்துக்கு உரிய தீர்வு வரும்!

## வடக்கு மாகாண ஆளுநர் உறுதி

தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் முன்னெடுத்துள்ள போராட்டத்திற்கு இன்று பிற்பகல் 6 மணிக்கு தீர்வு வழங்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் உறுதி வழங்கியிருக்கிறார்.

போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு வருகைதந்த ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் இதனை தெரிவித்துள்ளார்.

பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுவரும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் இன்று காலை யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் சேவையில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டதோடு சிறிது நேரம் ஆஸ்பத்திரி வீதியின் போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது.

சம்பவ இடத்திற்கு வருகைதந்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனியார் பேருந்து உரிமையாளர்களின் கோரிக்கை தொடர்பாக பேசுவதற்கு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிலரை ஆளுநரை சந்திப்பதற்காக அழைத்து சென்றார்.

பின்னர் போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு வருகைதந்த ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் இன்று பிற்பகல் 6 மணிக்கு ஆளுநர் செயலகத்தில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்த, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், இலங்கை போக்குவரத்து சபையினர் மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தினருடன் கலந்துரையாடி உரிய தீர்வினை பொற்றுத்தருவதாக உறுதி வழங்கினார்.

ஆளுநரின் வாக்குறுதியை அடுத்து முற்றுகைப் போராட்டத்தை கைவிட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தினர் தொடர்ந்து பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(01)

# இளநீர்க் காயொன்று 2000 ரூபாவிற்கு ஏற்றுமதி கடந்த வருடம் ரூபாய் ஆறு பில்லியன் வருமதி

## கைத்தொழில் அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

இளநீர் காயொன்றை 2000 ரூபா மதிப்பில் ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு முருதவெல ருவாவ கிராமத்திற்கு அருகாமையில் இரண்டாவது இளநீர் மர சாகுபடி கிராமத்தை அமைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏற்றுமதிக்காக இளநீர் மரம் நடப்படும் முதல் கிராமம் கடந்த ஆண்டு கீழ் முருதாவெளியில் தொடங்கப்பட்டதுடன் இவ்விரு கிராமங்களிலும் 100000 இளநீர் மரக்கன்றுகள் நடப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இங்கு அமைச்சர் மேலும் உரையாற்றுகையில், இலங்கையிலிருந்து ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திற்கு வாரத்திற்கு சுமார் 2,520,000 இளநீர் காய்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இளநீர் ஏற்றுமதி மூலம் 2022 ஆம் ஆண்டில் இரண்டு பில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன், கடந்த ஆண்டு (2023) இந்த வருமானம் ஆறு பில்லியன் ரூபாயாக அமைந்திருந்தது எனவும் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் நமது நாட்டின் முக்கிய ஏற்றுமதி பயிராக இளநீர் இருக்கும் என்பது நிச்சயம். இப்போது கூட உலக நாடுகளுக்கான தேவையில் 02 சதவீதத்தை கூட நம்மால் வழங்க முடியாதுள்ளது, எனவே, இளநீர் சாகுபடியை நாடு முழுவதும் பரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என தென்னை பயிரிடல் பணிப்பாளர் சபைக்கு தாம் பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ரெப-71)

### இலங்கைத் தமிழரசுக்.....

பிரச்சினை மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சனை. இந்த வழக்கு நீடிக்குமாக இருந்தால் அது சமூகத்திற்குச் செய்யும் துரோகமாகும்.

இதன்படி வழக்கானது எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது . மேலும், வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்த கட்சி உறுப்பினர்கள் நீதிமன்றுக்கு முன்னிலையாகியுள்ள நிலையில் கோரிக்கைகளை அவர்கள் ஏற்றுக்கொண் டனர்.

எனினும் எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றுக்கு முன்னிலையாகாவில்லை. அவரது நிலைப்பாடு தொடர்பில் கலந்தாலோசித்து மேலதிக முடிவை எடுப்போம், என்றார்.

மேலும், இலங்கை தமிழரசு கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராக பீற்றர் இளஞ்செழியனால் தாக்கல் செய்த வழக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ். நீதவான் நீதிமன்றத்தில் இன்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதையடுத்து எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதி வரை குறித்தவழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலங்கைத்தமிழரசுக்கட்சியின் தேசியமாநாடு கடந்த 19 ஆம்திகதி நடைபெறும்என்று கூறப்பட்டிருந்தநிலையில், அதற்குத் தடை விதிக்கக்கோரி யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் இருவேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவில் கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளின் தொடர்ச்சியாகவே இந்தமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. (04)

### இலங்கைத்.....

சார்பிலும் நாங்கள் சட்டத்தரணி நியமன பத்திரத்தை தாக்கல் செய்து அந்த அடிப்படையில் எங்களுடைய நிலைப்பாட்டை மிகச் சுருக்கமாக குறிப்பிட்டு இருந்தோம்.

ஏனைய இரண்டு எதிராளிகள் சார்பிலும் வேறு சட்டத்தரணிகள் தங்களுடைய நியமனப் பத்திரத்தை சமர்பித்தார்கள். ஐந்தாவது எதிராளி சண்முகம் குகதாஸ் சார்பில் எவரும் ஆஜராகி இருக்கவில்லை. அவருக்கான அழைப்புக் கட்டளை இதுவரையில் அவரிடம் கையளிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

வழக்காளியான தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நண்பர் குருபரன் ஏற்கனவே இரண்டு வாரங்களுக்கு வழங்கப்பட்ட தடை கட்டளையை மேலும் நீடிக்குமாறு தான் கோரவில்லை என தெரிவித்திருந்தார். அந்த வகையில் கட்டாணை தொடர்பாக எந்தவித நீடிப்பும் இன்று வழங்கப்படவில்லை.

அவர் அவ்விதம் தெரிவித்ததற்கான காரணம், கட்டாணை கடந்த 19ஆம் திகதி நடைபெற இருந்த மாநாடு தொடர்பாகவே குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த திகதி கடந்து போய்விட்ட நிலையில் யதார்த்த ரீதியாக அதை நீடிக்குமாறு கூற முடியாது. அந்த வகையில்தான் அவருடைய விண்ணப்பம் அமைந்திருந்தது,

எங்களுடைய தரப்பில் இந்த வழக்கு சுருக்கமாக முடிக்கப்பட கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்பதைச் சுட்டி காட்டினோம். இதே நேரத்தில் திருகோணமலை நீதிமன்றிலும் சமாந்தரமாக ஒரே நேரத்தில் இன்றைய தினம் இதே எதிராளிகளும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நண்பர் சுமந்திரனையும் சேர்த்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அழைக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்தோம்.

ஆகவே, இந்த வழக்குகள் சுருக்கமாக முடிக்கப்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பது இரண்டு தரப்பினருடைய பொதுவான நிலைப்பாடாக இன்றைக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றிலே தெரிவிக்கப்பட்டது என, அவர் குறிப்பிட்டார். (01)

### புதிய காவல்துறை......

பெற்றிருக்கும் தேசபந்து தென்னகோன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குறித்த சந்திப்பானது இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

நாட்டின் 36 ஆவது காவல்துறை மா அதிப ராக கடமைகளைப் பொறுப் பேற்றுக் கொண்டுள்ள நிலையிலேயே காவல்துறை மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளார்.

புதிய காவல்துறை மா அதிபருக்கு வாழ்த்துக் கூறிய ரணில் ,அவருடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடியுள்ளார்.

அதனையடுத்து புதிய காவல்துறை மா அதிபர் ஜனாதிபதிக்கு சம்பிரதாய பூர்வமாக நினைவுச் சின்னமொன்றையும் வழங்கியுள்ளார்.

### பொருளாதாரம் .......

பொருளாதாரத்தை சுருக்கி வைத்துள்ளதுடன், வட்டி வீதத்தை அதிகரித்தல், பாரியளவில் வரி விதித்தல், இறக்குமதியைக் கட்டுப்படுத்துதல் ஆகிய செயற்பாடுகளால் பொருளாதாரத்தைச் சுருக்கியுள்ளார் .

எமது திட்டம் பொருளாதாரத்தை விரிவாக்குவதாகும். பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டும்.

அத்துடன், தம்மிடம் இருக்கின்ற கொழும்பினை மையப்படுத்திய பொருளாதாரத்தினை கிராமிய மக்களுக்கு விரிவுபடுத்த வேண்டும். அத்துடன் புதிய பொருளாதார தோற்றுவாய்களை கிராமத்திற்கு எடுத்துச்செல்ல வேண்டும், என்றும் குறிப்பிட்டார். (04)

### அதீத வெப்பக் .......

நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (04)

### பலமான அரசியல் ....

தெரிவு செய்யப்படுவார்.

சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து பலமான அரசியல் கூட்டணியை ஸ்தாபிப்போம், என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச மேலும் தெரிவித்தார். (04)





செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV

காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட maalaikkathir@gmail.com

# விவசாயிகளின் கண்களில் மண்ணைத் தூவியவாறு பராக்கிரம சமுத்திரத்தில் சுற்றுலாப் படகுச் சேவை

## விவசாயிகள் அமைப்பின் தலைவர் ஜகத் அருண எதிர்ப்பு

பொலன்னறுவை விவசாயிகளின் கண்களில் மண்ணைத் தூவியவாறு பராக்கிரம சமுத்திரத்தை அண்மித்த பகுதியில் சுற்றுலாப் படகுத் திட்டமொன்றை அமுல்படுத்தப்படுவதற்கான இரகசிய ஏற்பாடுகள் குறித்து மாவட்ட விவசாயக் குழு கூட்டத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

விவசாயிகளின் இதய பூமி என்று சொல்லப்படும் பொலன்னறுவை பராக்கிரம சமுத்திரத்தில் சுற்றுலா படகுகள் விஸ்தரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அதுபற்றி விவசாயிகளுக்கு எதுவும் தெரியாது எனவும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக தமது விவசாயிகள் அமைப்பு கடுமையாக செயற்பட்டு வருவதாகவும் பொலன்னறுவை மாவட்ட விவசாய குழு கூட்டத்தின் போது பொலன்னறுவை பராக்கிரம சமுத்திர கூட்டு விவசாயிகள் அமைப்பின் தலைவர் ஜகத் அருண கீர்த்தி தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை பொலன்னறுவை நோக்கி ஈர்க்கும் வகையில் பராக்கிரம சமுத்திரத்தில் குறித்த படகுச் சேவை நடத்தப்படவுள்ளதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் இதற்கு நீர்ப்பாசனத் திணைக்கள சுற்றுச் சூழல் பிரிவின் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளதாக ஜகத் அருண கீர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

பராக்கிரம சமுத்திர பகுதியில் ஏற்கனவே குப்பைகள் மற்றும் மதுபான போத்தல்கள் நிறைந்து காணப்படுவதாகவும் அவற்றையே தடுக்க முடியாத ஒரு நிலையில் தற்போது இந்த படகுச்சேவையும் நடத்தப்பட்டால் அப்பகுதி நீர் மாசடைவதற்கான வாய்ப்புள்ளதாகவும், இவ்வாறான சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் அரசியல் தீர்மானங்களுக்கு இணங்குகின்ற அரச அதிகாரிகளும் இதற்கு பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்படி மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் பொலன்னறுவை மாவட்ட செயலாளர் சுதந்த ஏக்கநாயக்க தலைமையில் பொலன்னறுவை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. (ரெப-70)

## சாதுலியா வித்தியாலய மாணவருக்கு பாடசாலைப் பைகள் வழங்கப்பட்டன



பிறைந்துரைச்சேனை சாதுலியா வித்தியாலய மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் எம்.எல்.நிஜாம்தீன் அவர்களின் தலைமையில் இந்த வருடம் முதலாம் தரத்தில் இணைந்து கொள்ளும் மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் சனசமூக நிலைய நிருவாகத்திடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கோறளைப்பற்று பிரதேச சபையின் சனசமூக உத்தியோகத்தர்கள் ஏ.ஹாரூன் அவர்களின் வழிகாட்டலில் துரிதமாக செயற்பட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஊக்கமளிக்கும் முகமாக பாடசாலையில் கல்வியில் இணைந்து கொண்ட சிறார்களுக்கான பாடசாலை பைகளை மொகிதீன் சனசமூக நிலைய நிருவாகத்தினரான தலைவர் ஏ.ஜி.அஸ்லம், செயலாளர் எஸ்.ஐ.எம்.நிப்ராஸ், பொருளாளர் பிஸ்தாமி ரவூப், நிருவாக உறுப்பினர் டி.கே.அனீம் ஆகியோரின் பங்களிப்புடன் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக எம்.ஐ.எம். அஹ்சாப். உதவிக் கல்வி பணிப்பாளர் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மற்றும் எமது அதிதிகளாக எச்.எம்.தாஹிர் அதிபர் அந்நூர் தேசிய பாடசாலை ,எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக் அதிபர் ஓட்டமாவடி தேசிய பாடசாலை, பாடசாலை அபிவிருத்தி குழு தலைவர் எம்.ஆப்தீன், நூரியா ஜ/ம்ஆ பள்ளிவாயலின் தலைவர் அல்ஹாஜ் எஸ்.எம்.எம்./ஹசைன், மொகைதீன் தைக்கா பள்ளிவாசல் தலைவர் எம்.பி.எம்.ரொஷான் ஆகியோர் கலந்துகொண்டனர்

## கிழக்கின் மூத்த நிருவாக சேவை அதிகாரி கோபாலரெத்தினத்திற்கு பாராட்டுவிழா!



(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்குமாகாண பொது சேவை ஆணை குழுவின் முன்னாள் செயலாளரும், இந்நாள் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளருமான கிழக்கின் மூத்த நிர்வாக சேவை அதிகாரி கலாநிதி. எம் கோபால ரெத்தினத்திற்கு பாராட்டு விழா நேற்று இடம்பெற்றது .

கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் ஏ. மன்சூர் தலைமையில் அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது .

இரண்டு வருட காலம் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராக பணியாற்றிய கோபாலரெத்தினத்திற்கு அங்கு பொன்னாடை போர்த்தி பாராட்டு விழா இடம்பெற்றது.

அமைச்சின் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.




## காத்தான்குடி மத்திய கல்லூரியில் Skill2grow அங்குரார்ப்பணம்!

காத்தான்குடி மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளையினால் கல்லூரியில் இவ்வருடம் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவர்களை மையப்படுத்தியதாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளுமடை 2பசூற செயற்றிட்ட அங்குரார்ப்பண நிகழ்வு கல்லூரியின் கேட்போர் கூடத்தில் கல்லூரியின் அதிபர் எம்.ஏ.நிஹால் அஹமட் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்லூரியின் பிரதி அதிபர்களான எம்.என்.எம். பௌசான், எம்.ரீ.எம்.ஷரீக், பழைய மாணவர் சங்க செயலாளர் றிபாய் கலீல், பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளை செயலாளர் ஏ.ஸி.எம். அஸாம் மற்றும் பிரதம பேச்சாளர்களாக கல்லூரியின் பழைய மாணவர்களான தென்கிழக்குப் பல்கலைக் கழக பொறியியல் பீடத்தின் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான றிசாத் ஆதம்லெப்பை, கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் டொக்டர் எஸ்.ரீ.எம்.மாஹிர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த செயற்றிட்டமானது பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளையினால் மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தவுள்ளது.

முதற்கட்டமாக கல்லூரியில் கல்வி கற்று உயர் பதவியிலுள்ள 20 துறை சார்ந்த வல்லுனர்கள், அவர்களது வெற்றிக் கதைகளை கலந்துரையாடுகின்ற நிகழ்வு நடைபெறும்.

இரண்டாம்கட்டமாக பயிற்சிப்பட்டறைகள் மூலம் மாணவர்கள் தமது எதிர்காலத்தை தீர்மானிக்கக் கூடிய அல்லது தனக்குப் பொருத்தமான துறையினைத் தெரிவு செய்யக் கூடிய வாய்ப்பு வழங்கப்படும்.

மூன்றாம் கட்டமாக மாணவர்கள் தெரிவு செய்த துறைக்கு அவர்களை ஒரு வார காலம் பயிற்சிக்காக அனுப்பி, அவர்களது வேலை தொடர்பான அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்.

அத்துடன் சேர்த்து ஆங்கில மொழியில் புலமை பெற்றவர்களாக மாற்றுவதற்கான பயிற்சிப் பட்டறைகளும் தொடராக வழங்கப்படவுள்ளன.

# சாந்தனின் உடலை இலங்கை கொண்டு செல்வதற்கு தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னையில் உயிரிழந்த சாந்தனின் உடலை இலங்கை கொண்டு செல்ல தமிழக அரசு நடவடிக்கை எடுக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று விடுவிக்கப்பட்ட சாந்தன், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்தார். அவர் இலங்கை செல்ல இந்திய மத்திய அரசு கடந்த 24ஆம் திகதி அனுமதி அளித்த நிலையில், கல்லீரல் செயலிழப்பு காரணமாக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சாந்தன் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்தார்.

இந்த நிலையில், திடீரென்று நேற்றுக் காலை மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் சாந்தன் உயிரிழந்தார். அவரின் உடலை இலங்கைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், சாந்தனை ஏன் இலங்கைக்கு அனுப்பாமல் காலம் தாழ்த்தப்பட்டது? என தமிழக அரசிடம் கேள்வி எழுப்பியது.

இதற்கு பதிலளித்த அரசுத் தரப்பு, சாந்தனை கடந்த 27 ஆம் திகதி எயார் அம்புலன்ஸ் மூலம் இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், அவரது உடல் மருத்துவ ரீதியாக அந்தச் செயற்பாட்டுக்கு ஒத்துழைக்கவில்லை எனத் தெரிவித்தது.

இந்த நிலையில், சாந்தனின் உடலை இலங்கைக்கு அனுப்புவதற்கு தேவையான உதவிகள், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகளை நியமித்து நடவடிக்கை எடுக்க தமிழக அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.



சாந்தனின் உடலை இலங்கை கொண்டு செல்லத் தேவையான தூதரக அனுமதி, ஆவணங்கள் அனைத்தும் உடனடியாக வழங்கப்படும் என்று மத்திய அரசுத் தரப்பில் நீதிமன்றில் உறுதி அளிக்கப்பட்டது. (04)

# இஷான் - ஸ்ரேயாஸ் ஐயர் இருவரதும் ஒப்பந்தத்தை இரத்துச் செய்த பிசிசிஐ

இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கான ஒப்பந்தப் பட்டியலில் இருந்து நட்சத்திர வீரர்களான ஸ்ரேயாஸ் ஐயர் மற்றும் இஷான் கிஷன் ஆகிய இருவரும் நீக்கப்பட்டுள்ளனர்.

இந்திய ஆடவர் கிரிக்கெட் அணிக்காக விளையாடும் வீரர்களின் நடப்பாண்டு ஒப்பந்தப் பட்டியல் விபரத்தை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பிசிசிஐ) நேற்று வெளியிட்டது.

அதன்படி, ஆண்டுக்கு 7 கோடி ரூபாய் சம்பளத்தைக் கொண்ட ஏ பிரிவில் இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா, விராட் கோலி, வேகப் பந்துவீச்சாளர் ஜஸ்ப்ரித் பும்ரா மற்றும் சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தக்கவைக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல, 5 கோடி ரூபாய் ஆண்டுச் சம்பளம் கொண்ட ஏ பிரிவில், தமிழ்நாட்டைச் சேர்ந்த ரவிச்சந்திரன் அஸ்வின், மொஹமட் ஷமி, மொஹமட் சிராஜ், கே.எல் ராகுல், சுப்மன் கில் மற்றும் ஹர்திக் பாண்ட்யா ஆகிய 6 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இதில், கே.எல் ராகுல் மற்றும் சுப்மன் கில் ஆகிய இருவரும் பி பிரிவில் இருந்து ஏ பிரிவுக்கு முன்னேறியுள்ளனர்.

3 கோடி ரூபாய் ஆண்டுச் சம்பளம் கொண்ட பி பிரிவில், சூர்யகுமார் யாதவ், ரிஷப் பண்ட், குல்தீப் யாதவ், அக்சர் பட்டேல் மற்றும் யஷஸ்வி ஜெய்ஸ்வால் ஆகிய வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் சம்பளம் கொண்ட சி பிரிவில் 15 இந்திய வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். வொஷிங்டன் சுந்தர், ரிங்கு சிங், ருதுராஜ் கெய்க்வாட், சஞ்சு சாம்சன், ஷிவம் துபே உள்ளிட்டோர் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் சம்பளம் பெறவுள்ளனர்.

இதனிடையே, ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் சம்பளம் கொண்ட சி பிரிவில், இம்முறை புதிதாக 10 பேர் இணைந்துள்ளனர்.

அதேசமயம், ஸ்ரேயாஸ் ஐயர் மற்றும் இஷான் கிஷன் ஆகிய 2 வீரர்களினதும் பெயர்கள் இந்த ஆண்டு ஒப்பந்தப் பட்டியலில் பரிசீலிக்கப்படவில்லை என பிசிசிஐ





தெரிவித்துள்ளது.

பிசிசிஐ யின் எச்சரிக்கையையும் மீறி ஐபிஎல் தொடருக்காக உள்ளூர் கிரிக்கெட் தொடரான ரஞ்சிக் கிண்ணத்தில் குறித்த 2 வீரர்களும் பங்கேற்காமல் இருந்த காரணத்தால் அவர்களது மத்திய ஒப்பந்தத்தை பிசிசிஐ இரத்துச் செய்துள்ளதாகத் தெரிகிறது.

ஸ்ரேயாஸ் ஐயர் இதற்கு முன்பாக 3 கோடி சம்பளம் பெறும் பி பிரிவில் இருந்தார். இஷான் கிஷன் ஒரு கோடி சம்பளம் பெறும் சி பிரிவில் இருந்தார். தற்போது இவர்கள் இந்த பிரிவுகளில் இருந்து வெளியேற்றப்பட்டு இருக்கிறார்கள்.

இந்த நிலையில், எதிர்வரும் செப்டம்பர் 30ஆம் திகதிக்குள், குறைந்தபட்சம் 3 டெஸ்ட் போட்டிகள் அல்லது 8 ஒருநாள், அல்லது 10 ரி20 போட்டிகளில் விளையாடும் வீரர்கள், சி பிரிவில் சேர்க்கப்படுவார்கள் என்று பிசிசிஐ அறிவித்துள்ளது.

அதன் அடிப்படையில், இங்கிலாந்துக்கு எதிராக 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள துருவ் ஜுரல் மற்றும் சர்பர்ஸ் கான் இருவரும் தர்மசாலாவில் நடைபெறவுள்ள ஐந்தாவது டெஸ்ட் போட்டியிலும் விளையாட உள்ளனர். இதனால், சி பிரிவில் அவர்கள் இருவரும் இணைவதற்கு வாய்ப்பு இருப்பதாகத்





# ஓய்வுபெறுகிறார் எரஸ்மஸ்!

*தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவரான கிரிக்கெட் போட்டி நடுவர் மரைஸ் எரஸ்மஸ் தான் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.*

*மரைஸ் எரஸ்மஸின் இறுதி சர்வதேசப் போட்டியாக நியூசிலாந்து- அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் தற்போது நடைபெற்று வருகின்ற டெஸ்ட் தொடரின் முதல் போட்டி அமைகின்றது.*

*60 வயது நிரம்பிய மரைஸ் எரஸ்மஸ் சர்வதேச கிரிக்கெட் சபையின் முன்னணி நடுவர்கள் குழாத்தில் அங்கம் வகிப்பதோடு இதுவரை 80 டெஸ்ட், 124 ஒருநாள் மற்றும் 43 ரி-20 சர்வதேசப் போட்டிகளில் கடமையாற்றியுள்ளார். இவற்றில் 18 மகளிர் சர்வதேசப் போட்டிகளும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.*

*2006ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ரி-20 போட்டி ஒன்றின் மூலம் கிரிக்கெட் போட்டிகளை மத்தியஸ்தம் செய்ய ஆரம்பித்த மரைஸ் எரஸ்மஸ், ஐசிசியின் சிறந்த நடுவருக்கான விருதினை மூன்று ஆண்டுகள் (2016, 2017 மற்றும் 2021) வென்றிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.*

*அத்துடன் ஐசிசியின் சிறந்த நடுவருக்கான விருதுகளை அதிக தடவைகள் வென்ற நடுவர்களில் இரண்டாம் இடத்திலும் மரைஸ் எரஸ்மஸ் உள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் நடுவராக மாறுவதற்கு முன்னர் ஒரு வேகப்பந்துவீச்சாளராக உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் ஆடியிருந்த மரைஸ் எரஸ்மஸ் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கு ஓய்வு வழங்கிய போதிலும் முதல்தரப் போட்டிகளுக்கு தொடர்ந்து நடுவராக செயற்பட விருப்பம் கொண்டிருப்பதாக தெரிவித்திருந்தார். (04)*

# ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவரின் உடல் நாளையதினம் மொஸ்கோவில் அடக்கம்



யசிறைச்சாலையில் மர்மமான முறையில் உயிரிழந்த, ரஷ்ய எதிர்க் கட்சித் தலைவர் அலக்ஸி நவல்னியின் உடல் நாளை வெள்ளிக்கிழமை மொஸ்கோவில் அடக்கம் செய்யப்படும், என அவரது மனைவி யுலியா தெரிவித்துள்ளார்.

அத்துடன், இறுதி ஊர்வலம் அமைதியாக நடக்குமா? அல்லது ஊர்வலத்தில் கலந்து கொள்பவர்கள் கைது செய்யப்படுவார்களா? என்பது குறித்து உறுதியாகக் கூறமுடியாதுள்ளது, எனவும் யுலியா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மொஸ்கோ மாவட்டம், மரியினோவில் உள்ள மரியாள் தேவாலயத்தில் இறுதி ஆராதனை வழிபாடுகள் நடைபெற்று நல்லடக்கம் இடம்பெறுமென அலக்ஸியின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் அலெக்ஸியின் இறுதி ஊர்வலத்தில் அசம்பாவிதங்கள் ஏற்படாத வண்ணம் பாதுகாப்புப் பலப்படுத்தப்படுமென ரஷ்யச் செய்திகள் தெரிவிக்கின்றன. (04)

# நாவிதன்வெளி மத்திய முகாமில் வாராந்த சந்தை திறந்து வைப்பு





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மத்திய முகாம் இரண்டு கிராம சேவையாளர் பிரிவில் 1990 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் இயங்கி வந்த பழைய சந்தை நீண்ட காலமாக பாவனையற்று கிடந்தது. குறித்த சந்தையை பொதுமக்கள் பயன்படுத்தி தமது பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தக்கூடிய வகையில் நாவிதன்வெளி பிரதேச செயலகம், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை, சிறு கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை என்பன ஒன்றிணைந்து இந்த பழைய சந்தையை மீண்டும் சனிக்கிழமைகளில் இயங்கக்கூடிய புதிய வாராந்த சந்தையாக மாற்றி இன்று (29) திறந்து வைக்கப்பட்டது.

இந்த திறப்பு விழா நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி பிரதம அதிதியாக கலந்து கொண்டு வாராந்த சந்தையை திறந்து வைத்தார். இங்கு குறித்த பிரதேசத்தில் வாழும் பொதுமக்களால் உற்பத்தி செய்யப்பட்ட நஞ்சற்ற மரக்கறி , பழவகைகள் விற்பனை செய்யப்பட்டதுடன் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட நெசவு உற்பத்திப் பொருட்கள், அழகு சாதன பொருட்கள், தீன் பண்டங்கள் மற்றும் கிராம மட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உடல் ஆரோக்கியத்திற்கு தேவையான இதர உணவு உற்பத்தி பொருட்களும் இங்கு விற்பனை செய்யப்பட்டன. தொடர்ந்து சனிக்கிழமைகளில் இந்த வாராந்த சந்தையை திறப்பதற்கு ஏற்பாடுகள் செய்து தர வேண்டுமென வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்தத் திறப்பு விழா நிகழ்வில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. திலகராணி கிருபைராஜா, திணைக்களங்கள பொறுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச மட்டத்தில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# மாணவிகளுக்கு சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சி

(எம்.எம்.றம்ஸீன்)

கல்முனை அல் - பஹ்றியா மகா வித்தியாலயத்தில் கல்முனை வலயக்கல்வி பணிமனையின் அனுசரணையில் பாடசாலை மாணவிகளுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்குமான மாதாந்த சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சி அண்மையில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம்.பைசால் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வினை வழிகாட்டல் ஆலோசனை பிரிவு ஆசிரியை திருமதி ஏ.எம்.ஜனூன் நௌஸாத் நெறிப்படுத்திருந்தார்.

இந்நிகழ்வுக்கு கல்முனை வலயக்கல்வி பணிமனையின் பிரதிக் கல்வி பணிப்பாளர் திருமதி எம்.எச்.றியாஷா அவர்களும் மற்றும் பாடசாலையின் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் கலந்துரையாடல்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் பிரதேச சுகாதார நிலமைகளை ஆராயும் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் தஸ்லிமா பஸீர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி மாதாந்த கலந்துரையாடலில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், தாதி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு விவசாய திணைக்கள அணியினர் வெற்றிவாகை சூடினர்



*(வி.ரி.சகாதேவராஜா)*

*கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் சுற்று போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் உத்தியோகத்தர் அணியினர் இறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்று 2024ம் ஆண்டுக்கான வெற்றிக் கிண்ணத்தை தம்வசம் ஆக்கினர்.*

*மட்டக்களப்பு இந்து கல்லூரி மைதானத்தில் நேற்று (28) புதன்கிழமை மாலை நடைபெற்ற போட்டிக்கு மாகாண விவசாய பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. கலீஸ் தலைமை தாங்கியதுடன். முற்று முழுதான ஏற்பாடு களையும்மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப் பாளர் எம். பரமேஸ்வரனின் வழிகாட்டலில் மாவட்ட திணைக்கள உத்தியோகத்தர்கள் செய்திருந்தனர்.*

*நான்கு அணிகள் பங்குகொண்ட இச்சுற்றுப் போட்டியில்தாம்சந்தித்த சகல போட்டிகளிலும் நீண்ட ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்கள அணியினர்இறுதிப்போட்டியில்திருகோணமலை மாவட்ட விவசாய திணைக்கள அணியினருடன் பலப்பரீட்சை நடத்தினர்.*

*இதன்போது நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று களத்தடுப்பை தீர்மானித்த சுகிரதராஜ் தலைமையிலான மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்கள அணியினர் சிறப்பான பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பின் வியூகங்கள் மூலம் 7 ஓவர்களுக்கு 46 ஓட்டங்களை மட்டுமே எதரணிக்கு வழங்கினர்.*

*47 என்ற வெற்றி இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்கள அணியினர் 9 விக்கட்டுக்களால் வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கினர்.*



# பொலிஸ் மா அதிபர் பற்றிய சட்டப்பேரவைக் கூட்டத்தில் சபாநாயகர் அரசியலமைப்பை மீறி வாக்களித்துள்ளார்!

## எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னகோனை நியமிக்கும் யோசனையை பரிசீலித்த சட்டப் பேரவை கூட்டத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அரசியலமைப்பை மீறி வாக்களித்துள்ளார் என எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், “பொலிஸ் மா அதிபர் நியமனம் சட்டப் பேரவையில் முன்வைக்கப்பட்ட போது 4 சட்டப் பேரவை உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர், இருவர் எதிர்த்து வாக்களித்தனர், இன்னும் இருவர் கருத்து தெரிவிக்காமல் மௌனமாக இருந்தனர்.

முறைப்படி ஆரம்ப சுற்றில் வாக்களிக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு கிடையாது. அளிக்கப்பட வாக்குகள் சமநிலையில் இருந்தால் மட்டுமே சபாநாயகர் வாக்களிக்க முடியும். சமநிலை இல்லாதிருந்தால் சபாநாயகருக்கு வாக்களிக்க அனுமதி இல்லை.

ஆனால், தேசபந்து தென்னகோன் விடயத்தில் சபாநாயகர் அரசியலமைப்பை மீறி வாக்களித்துள்ளார். இது தொடர்பாக நீதிமன்றத்தில் உண்மைகளை முன்வைப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மனித உரிமை குற்றச்சாட்டுக ளுக்கு உள்ளாகிய ஒருவரே இவ்வாறு பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் முன்மாதிரியானவர்களாக இருக்க வேண்டும். சட்டத்தை மீறும் ஒருவரால் அவ்வாறு முன்மாதிரியாக இருக்க முடியாது.

மேலும், பொலிஸ் மா அதிபர் பதவிக்கு நியமிக்கப்படுகின்ற நபர் கண்ணியமிக்கவாராக இருத்தல் வேண்டும். அப்படியான ஒருவருக்கு மாத்திரமே சட்டத்தை சரியாக செயல்படுத்த முடியும். இதனடிப்படையில் ஐக்கிய



மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் தற்போதைய பொலிஸ் மா அதிபர் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார். (ரெப-69)

# 36 வருட கல்விச் சேவையிலிருந்து பணிப்பாளர் சரவணமுத்து ஓய்வு



(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை தமிழ்ப் பிரிவு கோட்டக் கல்வி பணிப்பாளர் சண்முகம் சரவணமுத்து தனது 36 வருட கல்வி சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.

இன்று கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் அவருக்கான கௌரவம் வழங்கப்பட்டது.

பாண்டிருப்பைச் சேர்ந்த சேர்ந்த சரவணமுத்து 1988 இல் நியமனம் பெற்று மத்திய முகாம் நாலாம் கொலனி வாணி வித்தியாலயத்தில் கற்பித்து பின்னர் அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலயம் நாலாம் கொலனி வாணி வித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராக இருந்து பின்னர் நாவிதன்வெளி கோட்ட கல்வி பணிப்பாளராக நான்கு வருடமும் இறுதியாக கல்முனை தமிழ் பிரிவு கோட்டக் கல்வி பணிப்பாளராக 5 வருடமும் கடமையாற்றி நேற்றைய தினம் ஓய்வுபெற்றார்.







## இலண்டனில் சர்வதேச "ஸ்டெம்" விருது சாய்ந்தமருது சிறுமிக்கு




"ஸ்டெம்" அணுகு முறை ஊடாக "அல்குர்ஆன் தஜ்வீத்" கற்கையில் பாண்டித்தியம் பெற்ற உலகின் முதல் சிறுமியாக இலண்டனில்வதியும்சாய்ந்தமருது சிறுமி மர்யம் ஜெஸீம் தன்னை சான்றுப்படுத்தி சர்வதேச புகழ் பெற்ற "ஸ்டெம் விருது"க்கு இரு பிரிவுகளில் தெரிவாகி உள்ளார்.

இங்கிலாந்தின் பிரபல நகரங்களில் ஒன்றான மில்டன் கீன்ஸ் நகரில் முதல் முறையாக தொடக்கி வைக்கப்படும் உலகின் பிரசித்தி பெற்ற ஸ்டெம் விருது 2024 விருதுக்கு இங்கிலாந்தில்பல பாகங்களில்இருந்தும் கிடைக்கப் பெற்ற நூற்று கணக்கான ஸ்டெம் நிகழ்ச்சி திட்டங்களில் இருந்து விருது பெற தெரிவான இறுதி தேர்வாளர்களில்ஒருவராக மர்யம் ஜெஸீம் இடம் பிடித்துள்ளார்.

அதிலும் குறிப்பாக இச்சிறுமி பாடசாலை மற்றும் உயர் கல்வி சார்ந்த மாணவர் நட்சத்திரப் பிரிவு மற்றும் , மாற்றீட்டு சிந்தனையாளர், ஒளி விளக்காளர் பிரிவு என்ற இரண்டு பிரிவுகளில் விருது பெற தகுதி பெற்றுள்ளார்.

ஸ்டெம் கல்வி முறை என்பது விஞ்ஞானம் , தொழிநுட்பம் , பொறியியல் மற்றும் கணிதம் துறைகளை ஒருங்கிணைத்த கல்வி முறை .

அல்குர்ஆனை அழுத்தம் திருத்தமாக பாரம்பரிய மத்ரஸா கல்வியை நாடாதும் ஸ்டெம் கல்வி முறையின் ஊடாக சுயமாக பயின்றும் தேர்ச்சி பெறலாம் என்பதை தனது வாழ்வியல் சான்றுகளின் ஊடாக சமர்ப்பித்த திட்டமே உலக பிரசித்தி பெற்ற ஸ்டெம் விருதுக்கு இரண்டு பிரிவுகளில் விருது பெற தகுதி பெற்றுள்ளது

இவ்விருது பெற தெரிவான இறுதி தேர்வாளர்களுள் மர்யம் ஜெஸீம்மட்டுமேஒருஇளம்வயது சிறுமியாக பரிணமிக்கிறார் .

இச் சிறுமி தெரிவான பிரிவுகளில் தேர்வான இறுதி தெரிவாளர்களுள் உயர்கல்வியை தொடரும் மாணவர் களும் , தொழில்சார் நிபுணர்களும் , உயர்கல்வி மற்றும் தொழில் சார் நிபுணர்களும் தெரிவாகி உள்ளனர் .

இவர்களுடன் பதினொரு வயது டைய மர்யம் ஜெஸீமின் செயற்பாட்டு திட்டங்கள் இவ்விருதில் பணியாற்றிய பல நடுவர்களை ஈர்த்து இறுதி தேர்வாளர்களுள்ஒருவராக மர்யம் தெரிவு பெற செய்திருப்பது அல் குர்ஆனை திறம்பட பயில்வதில் செல்வாக்கு செலுத்தி உள்ள ஸ்டெம் அணுகு முறையும் அதன் ஊடாக பெற்ற தேசிய மற்றும் சர்வதேச அடைவுகளும் ஆகும் . இது இச் சிறுமியின் வாழ்வில் இன்னுமொரு மைல் கல் மற்றும் வரலாற்றுச் சாதனை ஆகும்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
DOWNLOAD DRIVER APP
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
SCHEDULED BOOKING
New Feature
JRIDE TAXI APP
SPEED IT NET
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!